# பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

O.S. No.143-2016 Date : 05-01-2024

பெயர் : செல்லன் வாசா 3

1) எனக்கு எழுத, படிக்கத் தெரியாது. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வாதி என்னை அழைத்து வந்தார். தாவா சொத்தின் புல எண். விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா தரப்பினரின் வம்சாவழி தெரியுமா என்றால் தெரியும். முருக மூப்பர் என்பவர் மூலம் ஏற்பட்ட வம்சாவழி தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடாசல மூப்பர் என்பவர் மொட்டைய மூப்பர் என்பவரின் தம்பி. வெங்கடாசல மூப்பர் , மொட்டைய மூப்பரின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடாசல மூப்பர் , மொட்டைய மூப்பரின் தகப்பனாரின் உடன் பிறந்தவர்கள் பற்றி விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வெங்கடாசல மூப்பருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி பச்சை, 2ம் மனைவி பாஞ்சாலி என்கிற கட்டச்சி ஆகும். வெங்கடாசல மூப்பர், பச்சையம்மாள் ஆகியோர் மகன் பெயர் முருகேசன் என்றால் சரிதான். வெங்கடாசல மூப்பர் மற்றும் பாஞ்சாலி ஆகியோருக்கு பிறந்தவர்கள் சின்னபாப்பா, ராணி, காந்திமதி என்றால் சரிதான். முருகேசன் என்பவரின் மகள் அமுதா என்றால் சரிதான். முருகேசன், பச்சையம்மாள், சின்னப்பாப்பா ஆகியோர் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. ராணி, காந்திமதி ஆகியோர் உயிருடன் உ ள்ளார்களா என்றால் ராணி உயிருடன் உள்ளார், காந்திமதி யும உயிருடன் உள்ளார். காந்திமதியின் கணவர் 3ம் பிரதிவாதி கோவிந்தன்.

2) சின்னப்பாப்பா வாரிசுகள் இல்லாமல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். சின்னப்பாப்பா காலமான பின்பு அவரது சொத்துக்களை முருகேசன் அடைந்துகொண்டார் என்றால் இல்லை. சின்னப்பாப்பாவின் கணவர் பணக்காரன் அடைந்துகொண்டார். மேற்படி பணக்காரன் என்பவருக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் முழு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் 3 இடங்களில் சொத்துக்கள் உள்ளது. வெங்கடாசல மூப்பருக்கு எந்த புல எண்ணில், எவ்வளவு சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது என்றால் தாவா சொத்துக்கள் முழுவதும் வெங்கடாசல மூப்பருக்கு கிடைக்கப்பெற்றது. வெங்கடாசல மூப்பர் 01.12.1986 அன்று உயில் எழுதி வைத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3) அந்த உயிலின் அடிப்படையில் அவரது சொத்துக்கள் யாருக்கு சென்றடைய வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 19.10.1987 அன்று வெங்கடாசல மூப்பர் மற்றொரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 உயில் ஆவணங்களின் அடிப்படையில் வெங்கடாசல மூப்பாருக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் அந்தந்த பயனாளிகள் அடைந்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா பி அட்டவை புல எண் 14/32ல் உள்ள 4 ஏர்ஸ் இடமானது வெங்கடாசல மூப்பருக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றால் அது அவருக்கு பூர்வீக மாக கிடைக்கப்பெற்றது. வெங்கடாசல மூப்பர் அச்சொத்தை கிரையம் பெற்றாரா என்றால் இல்லை.

4) பி அட்டவணை புல எண் 14/34 ல் உள்ள 4.5 ஏர்ஸ் இடத்தை வெங்கடாசல மூப்பர் அவரது மகள் ராணிக்கு உயில் ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது தாவ சொத்துக்கள் வாதி குறிப்பிட்டுள்ள வம்சாவழிப்படி பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. சின்னப்பாப்பாவின் கணவர் சின்னப்பாப்பா காலமாவதற்கு முன்பாக இறந்தாரா அல்லது பின்பாக இறந்தாரா என்றால் அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. சின்னப்பாப்பாக உயிருடன் இருந்த காலத்தில் யார் அவருக்கு சவரட்சணை செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ராணி என்பவர் உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன்தான் உள்ளார் அவரது சொத்துக்கள் யாரிடம் உள்ளது என்றால் அது ராணிக்கு தான் தெரியும். தாவா எ அட்டவணை சொத்து மொட்டைய மூப்பார் குமாரர்களுக்கு பாத்தியமான இருந்தது என்று நிரூபன வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது எந்த ஆவணத்தை பார்த்துள்ளீர் என்றால் எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை. மொட்டைய மூப்பர் குமாரர்கள் எந்த வருடம் வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எந்த வருடம் எனக்கு தெரியாது. கந்தசாமி மூப்பருக்கு தாவா எ அட்டவணை சொத்திற்கு பட்டா ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) பழனியம்மாளுக்கு கந்தசாமி மூபபர் என்ன ஆவணம் எழுதிவைத்தார் என்றால் 10 வருடங்களுக்கு முன்பு உயில் ஆவணம் எழுதி வைத்தார். கந்தசாமி உயில் ஆவணம் எழுதி வைத்து 1 ஆண்டு கழித்து இறந்துவிட்டார் அநத் உயில்ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. தாவா எ மற்றும் பி அட்டவணை சொத்து தொடர்பாக கந்தசாமி எத்தனை உயில் ஆணம் எழுதிவைத்துள்ளார் எனற்ால் ஒரே உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். தாவா பி அட்டவணை சொத்து தொடர்பாக கந்தசாமி பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் பார்த்துள்ளீரா என்றால் இல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.